IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | சிலம்பரசன் |
| FATHER'S NAME | - | வேலு |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.03.2024.

All Accsued Present.

நான் வேலூர் தோட்டபாளையத்தில் குடியிருக்கிறேன். நறுவி மருத்துவமனையில் பணி புரிகிறேன். ஆஜர்களை எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கில் இறந்தவர் என்னுடைய அப்பா. 04.01.2021 தேதியில் மாலை சுமார் 3 மணிக்கு மேல் என் அம்மாவிடம் சொல்லாமல் என் அப்பா ஸ்கூட்டி பெப் அதன் பதிவு எண் TN 02 AA 6033 என்ற வாகனத்தில் வீட்டில் இருந்து சென்றார். அதன் பிறகு அவர் வீட்டிற்கு திரும்பவில்லை. நான்கு நாட்கள் வரை நாங்கள் காத்திருந்த போதும் அவர் வீட்டிற்கு வரவில்லை. அதனால் நாங்கள் 10.01.2021 தேதியில் வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக நானும் அம்மா. தம்பி தங்கை ஆகியோர் சென்றோம்

அங்கு என் அப்பா காணவில்லை என்று புகார் கொடுத்தோம். மறுநாள் வி.ஏ.ஓ, தாசில்தார் ஆகியோரிடம் இருந்து என் அம்மாவிற்கு தொலை பேசி வந்தது. வேலூர் முத்து மண்டபம் எரிமேடை அருகில் ஒரு சடலம் கால் மட்டும் தெரியும் படி இருப்பதாகவும், அதனை அடையாளம் காட்ட வரும் படி சொன்னார்கள் அந்த சமயத்தில் நான் என் அம்மாவுடன் இருந்தேன். அதன் பிறகு நானும் என் அம்மா தம்பி தங்கை ஆகியோர் அந்த இடத்திற்கு சென்று பார்த்த போது வி.ஏ.ஓ , தாசில் தாரர் இன்ஸ்பெக்டர், போலிசார் சுமார் 5. 6 பேர் இருந்தார்கள். அந்த இடத்தில் இருந்து ஒரு சடலம் அழுகிய நிலையில் புழுக்களுடன் தோண்டி எடுக்கப்பட்டது. அந்த உடலில் சிகப்பு கலர் சட்டையும் நில கலர் கட்டம் போட்ட லுங்கியும் இருந்தது. அந்த உடைகளை வைத்து அது என்னுடைய தந்தை தான் என்று நானும் என் அம்மா தம்பி தங்கை ஆகியோர் சொன்னோம். அந்த உடலை ஆராய்ந்து பார்த்ததில் இடது பக்க மார்பில் ஒரு வெட்டு காயமும், வயிற்றுக்கு கீழே சுமார் 3 குத்து காயங்கள் இருந்தது. வலது முழுங்கைக்கு கீழ் கை இல்லாமல் இருந்தது. வலது தொடையில் வெட்டு காயங்கள் இருந்தது. வலது கால் பாதத்தில் ஐந்து விரல்களும் இல்லை. பிரேத பரிசோதனை அந்த இடத்திலேயே மருத்துவர் செய்தார். போலீசார் எங்களிடம் யார் மீது சந்தேகம் உள்ளது என கேட்டார்கள். அதற்கு நாங்கள் ஜெகன், பரசுராமன், மணி, அலெக்ஸ், மகேஷ், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் மீது சந்தேகம் இருப்பதாக சொன்னோம். ஏன் என்றால் ஜெகனின் மச்சானை என் அப்பா தான் கொன்று விட்டதாக மேற்சொன்ன நபர்கள் சொல்லி கொண்டு

இருந்தார்கள் ஆனால் ஜெகனின் மச்சான் மனநிலை சரியில்லாமல் கால்வாயில் விழுந்ததால் தான் இறந்து விட்டார். என் அப்பா இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் என் தங்கை ஜான்சி ராணியை எதிரி பரசுராமன் காரை கூட்டு ரோடில் என் அப்பாவை சும்மா விடமாட்டேன் என்றும் சொல்லி வை என்றும் என் வழியில் குறுக்கே வரவேண்டாம் என்றும் மிரட்டி உள்ளார்கள். அதனை என் தங்கை என்னிடம் வந்து சொன்னார். மேற்சொன்ன விவரங்களை போலீசார் என்னிடம் விசாரணை செய்த போது இரண்டு முறை சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சட்டை மற்றும் லுங்கி தான் சடலத்தை தோண்டி எடுத்த தேதியில் சடலத்தில் இருந்து சட்டை மற்றும் லுங்கி ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 7 ஆவது சாட்சி பிரகாஷ் ராஜ் என்னுடைய சகோதரர் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் 5 ஆவதாக உள்ள சாட்சி ஈஸ்வரி என்னுடைய அம்மா என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 8 என்னுடைய பெரியப்பா என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 9 என்னுடைய சகோதரியின் கணவர் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 10 என்னுடைய சகோதரி என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 11 ஜெகன் மச்சான் அஜித்தின் மாமா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 16 என்னுடைய அப்பாவின் தங்கை மருமகன் என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 17 என் அப்பாவின் தங்கை மகன் என்றால்

சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 18 வெங்கடசன் எங்கள் வீட்டில் எதிர் வீட்டில் உள்ளாரா என்றால் சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள சாட்சி 20 என்னுடைய தாய் மாமன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையின் போது 04.01.2021 ஆம் தேதி இரவு 9 மணிக்கு வீட்டில் இருந்து யாருக்கும் சொல்லாமல் சென்று விட்டார் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை காணவில்லை என்று காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்த அன்று என்னையும் என்னுடைய அம்மா, தம்பி தங்கை ஆகியோர்களை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். சம்பவ இடத்திற்கு 11 ஆம் தேதி எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் காலை 9.30 மணிமுதல் 10 மணிக்குள் சென்றோம். அப்போது பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள். என் அப்பா பயன்படுத்திய இரு சக்கர வாகனம் அந்த இடத்தில் இருந்ததா என்றால் இருந்தது. 10.01.2021 தேதியில் சம்பவ இடத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நாங்கள் யாரும் போகவில்லை. பிரேத பரிசோதனை முடித்த போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் பகல் சுமார் 1 மணி இருக்கும். அடையாளம் காட்ட முடியாத அளவுக்கு உடல் சிதைந்து இருந்தது. என் அப்பா இருக்கும் வரை என் அப்பா மீது வழக்கு ஏதுவும் இருந்ததா என்றால் சாராயம் விற்றதாக வழக்கு இருந்தது. வேறு எந்த வழக்கும் இல்லையா என்றால் ஆமாம். எதிரிகள் மீது சந்தேகம் இருப்பதாக நான் போலீசாரிடம் கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. வி.ஏ.ஓ,தாசில்தார் ஆகியோர் என் அம்மாவிற்கு

தொலைபேசி செய்து சம்பவ இடத்திற்கு வர சொன்னதாக போலீசார் என்னை விசாரணை செய்த போது சொன்னேன் என்றால் ஆமாம். என் அப்பா காணாமல் போன 4 தேதி முதல் 10 ஆம் தேதி வரையில் உள்ள தேதியில் இடைப்பட்ட தேதியில் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தோமா என்றால் இல்லை 10 ஆம் தேதி தான் கொடுத்தோம். தகவல் கிடைத்து நானும், என் அம்மா தம்பி தங்கை சம்பவ இடத்திற்கு சென்ற போது என் அப்பாவின் சடலத்தை தோண்டி வெளியில் வைத்து இருந்தார்கள் என்றால் இல்லை. நாங்கள் சென்ற பிறகு தான் எடுத்தார்கள். எங்களை போலீசார் அந்த சமயத்தில் விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். நானும், என் அம்மா தம்பி தங்கை தவிர அனைத்து சொந்தகாரர்களும் வந்தார்களா என்றால் வந்தார்கள். சொந்தக்காரர்கள் எவ்வளவு பேர்கள் வந்தார்கள் என்றால் அனைவரும் வந்திருந்தார்கள் யார் யார் என்று நான் பார்க்கவில்லை. அவர்களையும் போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். என் அப்பாவின் இறப்பிற்கு எதிரிகள் காரணம் அல்ல என்றாலும் எதிரிகள் மீது பொய்யாக குற்றசாட்டை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY